சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – துணை ஆணையர் (மா.வ), திருப்பூர்–1 அலுவலகம் – செல்வி ஆ.சுவாதினி என்பவர் கருணையடிப்படையில் 15.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (ப) எண்.233**

**நாள்: 25.07.2023**
**சோபகிருது , ஆடி–9,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2054**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. ஈரோடு கோட்டம் இணை ஆணையரின் (மா.வ) செயல்முறைகள் ஆணை எண். ந.க.8173/2021/அ3, நாள் 08.12.2021.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.ஒய்–3/3006153/2022, நாள் 29.09.2022.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், ஈரோடு வணிகவரி கோட்டத்திற்குட்பட்ட, உதவி ஆணையர் (மா.வ), திருப்பூர் மையம்–2 அலுவலகத்தில் மாநிலவரி அலுவலராகப் பணிபுரிந்தபோது 13.08.2019 அன்று மறைந்த திரு. இரா.ஆனந்தன் என்பவரின் மனைவி திருமதி. ஆ.இந்துமதி, தனது மகளான செல்வி ஆ.சுவாதினி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 24.07.2020 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும், விண்ணப்பம் அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் பெறப்பட்டுள்ளது என்றும், கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து சான்றுகள்/ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டதில், மறைந்த அரசு ஊழியரின் மகள் செல்வி ஆ.சுவாதினி என்பவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்பதால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தகுதியானவர் எனவும், இதன் காரணமாக மனுதாரரின் கோரிக்கை மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட இணை ஆணையர் (மா.வ), ஈரோடு கோட்டம், ஈரோடு அவர்களின் செயல்முறைகளின்படி செல்வி ஆ.சுவாதினி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளதாவும், இதன் தொடர்ச்சியாக, தனியர் 15.12.2021 முற்பகல் முதல் துணை ஆணையர் (மா.வ), திருப்பூர்–1 அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தனியர் பணியில் சேர்ந்த நாளான 15.12.2021 முற்பகல் முதல்

தனியரின் பணியினை இளநிலை உதவியாளர் பணித்தரத்தில், வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. வணிகவரி ஆணையரின் கருத்துருவை கவனமுடன் ஆய்வு செய்து, வணிகவரித் துறையில், ஈரோடு வணிகவரி கோட்டத்திற்குட்பட்ட, உதவி ஆணையர் (மா.வ), திருப்பூர் மையம் 2 அலுவலகத்தில் மாநிலவரி அலுவலராகப் பணிபுரிந்தபோது 13.08.2019 அன்று மறைந்த திரு. இரா.ஆனந்தன் என்பவரின் மகள் செல்வி ஆ.சுவாதினி என்பவருக்கு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், துணை ஆணையர் (மா.வ), திருப்பூர்-1 அலுவலகத்தில் கருணை அடிப்படையில் வழங்கப்பட்ட இளநிலை உதவியாளர் பணியை தனியர் பணியில் சேர்ந்த நாளான 15.12.2021 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.4539/ட்டி1/2023, நாள் 26.06.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.5062704/ஜி1/2023, நாள் 14.07.2023 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>

✓செல்வி ஆ.சுவாதினி, இளநிலை உதவியாளர்,
துணை ஆணையர் (மா.வ) அலுவலகம், திருப்பூர்-1.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)

<u>நகல்:</u>

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை - 9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

4/8/2023.
பிரிவு அலுவலர்

4/8/23